# சித்தாண்டியில் ரயில் குண்டு வைத்து தகர்ப்பு: 7 பேர் சுட்டுக்கொலை; 11 பேர் காயம்

(மட்டக்களப்பு)
மட்டு. சித்தாண்டிப்பகுதியில் ரயிலில் பயணம் செய்தவர்களில் ஏழு பேர் ஆயுதம் தாங்கியோரால சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 11 பேர் படுகாயமடைந்தனர். ரயில் என்ஜின் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதுடன் ரயில் பெட்டிகள் தீமூட்டி எரிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 7 இதழ் 162
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22 — 07 — 1992

## கரையோர பகுதிகளில் பீரங்கி, ஷெல் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ்.நகர் கரையோரப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை நேற்றுக் காலை மேற்கொண்டனர்

இதேவேளை நேற்று நண்

[4-ம் பக்கம் பார்க்க]

## படை முகாம்களுக்கு அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டிலுள்ள படை முகாம்களுக்கு நேற்று முன்தினம் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்கா நேரில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பலாலி, வெற்றிலைக்கேணி, சட்டைக்காடு, ஆனையிறவு, பூநகரி, சங்கத்தார்வயல் பகுதிக்கும் அமைச்சர் ஜயம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சருடன் அரசு அதிகாரிகள் பலரும், கூட்டுப் படைத்தளபதி ஹமில்டன் வனசிங்காவும் நிதிருந்தனர்.

## மலையகத் தோட்டங்களில்

# புதிய சிங்களக் குடியேற்றம்: இ. தொ. கா. பலத்த எதிர்ப்பு

### வேலைநிறுத்தம் செய்ய ஆலோசனை

(நுவரெலியா)
மலையக தோட்டப்பகுதிகளிலுள்ள தரிசுநிலங்களில் அரசினுல் சிங்களக் குடியேற்றம் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதற்கு இ. தொ. கா. பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கொத்மலை நீர்த்தேக்கம் உருவாகியிருப்பதை அடுத்து வீடுகளை இழந்த சிங்களவர்களை மலையகத் தோட்டங்களில் குடியேற்றுவதற்கு அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இ. தொ. கா. பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மலையகத்தில சிங்களவர்களை குடியேற்றி தமிழர்களை சிறுபான்மையாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சிங்களக் குடியேற்றத்தை அரசு கைவிடாதபட்சத்தில தோட்டங்களில பெயரளவில் வேலைநிறுத்தம் செய்வதற்கும் இ. தொ.கா. தீர்மானித்துள்ளது. (மா-ரி)

## கிழக்கில் இராணுவ ரோந்து தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல்களினுல் கிழக்கு மாகாணத்தில் இராணுவ ரோந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு முகாமிலிருந்து பிறிதொரு முகாமிற்கு வாகனங்களிலும் காலநடையாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு சங்கம் மூலம் மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்
பாவனையாளர்களுக்கு மண்எண்ணை கிடைப்பதற்கு வசதியாக சகல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அடுத்த வாரம் முதல் மண்எண்ணை வழங்கப்படுமென காவல்துறை அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைமை குறித்து பலாலியில் உயர்மட்ட மாநாடு

[யாழ்ப்பாணம்]
பாதுகாபபு நிலைமை குறித்தும் அடுத்த படை நடவடிக்கை பற்றியுமான அவசர உயர்மட்ட மாநாடு நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் நடைபெற்றுள்ளது.

இம்மாநாட்டில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க, கூட்டுப் படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்கா, வட

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். செயலகம் முன்னுல் தீவக மக்கள் மறியல் போர்

(யாழ்ப்பாணம்)
நிவாரணப் பொருட்கள் வழங்கபடாததை கண்டித்து நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த தீவக மக்கள் நேற்று திடீரென யாழ். செயலகத்தின் முன்னுல் மறியல் போராட்டம் நடாத்தினுர் இதனுல் செயலக அலுவல்கள் அனைத்தும் சில மணித்தியாலங்களுககு ஸ்தம்பிதமடைந்தது.

இம்மாதத்துக்குரிய நிவாரணப் பொருட்கள் இதுவரை வழங்கப்படாததை ஆட்சேபித்தே தீவக மக்கள் மேற்படி மறியல் போராட்டத்தை அமைதியாக நடாத்தினுர்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)
ஜூலை மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள், நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஒய்வூதியப் பிரிவு ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (71)

## இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாடுகள் தயக்கம்

(கொழும்பு)
வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் யுத்தம் காரணமாக பல நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயக்கம் காட்டிவருகின்றன.

இலங்கை பாதுகாப்பு நிலை குறித்து பல வெளிநாடுகள் ஐயம் தெரிவித்துள்ளன.

இதனுல் பல நாடுகள் இலங்கையல் முதலீடு செய்வதற்கு தொடர்ந்தும் பின்னடித்து

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற் படையினர் ஏழு பேர் கைது

(மட்டக்களப்பு)
வாழைச்சேனை ஓட்டமாவடிப் பகுதியைச் சேர்ந்த ஏழு முஸ்லிம் ஊர்காவற்படையினர் வாழைச்சேனைப்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் பொலிஸ் நிலையத்தில் சில மணி நேரங்கள் தடுத்து வைக்கப்பட்டபின் மேலிடத்தின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டனராம்.

கிழக்கில் முஸ்லிம் ஊர்காவற்படையினர் தமிழ்மக்களுக்கெதிராக தீவிரமாக செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## வடக்கு-கிழக்கை பிரிக்குமாறு முஸ்லிம் மாநாடு தீர்மானம்

(கொழும்பு)
வடக்கு-கிழககு மாகாணம் நிரந்தரமாக இணைக்கப்படக்கூடாதென்றும் பிரிக்கப்பட்டு தனித்தனி மாகாணமாக்கப் படவேண்டுமென 'அகில இலங்கை முஸ்லிம் மாநாடு' தீர்மானித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'இம்மாநாட்டிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமாக இடம்பெற்றுவரும் வேளையில் முஸ்லிம் அமைப்புகளும் இதற்கு துணைபோவதாக எழும் குற்றச்சாட்டுகளும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ருடியோ

அவசரமாக, றபர் சீல்கள் பாஸ்போட், அடையாள அட்டைகள் மற்றும் கலர் படங்களுக்கும் விளம்பர போட் எழுதுவதற்கும். தரன் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6523)

### வல்லாரைக் குளிசை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்கு மிடம் எஸ், ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-6553)

## அகதிகளுக்கு அரிசி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வலி. வடக்குப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து தற்போது சுன்னு சம் பகுதியில் தங்கியிருப்பவர் களுக்கு சுன்னுகம் மேற்கு முத்தமிழ்மன்ற நூலகத்தினர் இலவச அரிசி வழங்கிவருகின் றனர்.

பருத்தித்துறை விநாயகர் தருமநிதியத்தினர் மேற்படி நூலகத்தினருக்கு இலவச அரிசியினை அன்பளிப்புச் செய் திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (56)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## அராலி வி. க. வெற்றி

[வட்டுக்கோட்டை]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளை யாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டியில் அராலி அண்ணு விளையாட்டுக் கழகம் சுழிபுரம சத்தியாவிளை யாட்டுக் கழகத்தை 2:1 என் னும் கோல்கணக்கில் தோற் கடித்து சாம்பியனுக்கான வெற்றிக்கேடயத்தை சுவீக ரித்துக்கொண்டது.

இந்த இறுதிச்சுற்றுப் போட்டி வட்டுக்கோட்டை சங்கரத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெற் றது இரு கழகங்களும் விறு விறுப்பாக விளையாடியபோதி லும் அராலி விளையாட்டுக்கழ கம் வெற்றி பெற்றது.

அராலி அண்ணு விளையாட் டுக்கழகம் கடநத வருடமும் சாம்பியனுகியது குறிப்பிடத் தக்கது. (139)

மட்டு. செயலக வளவிற்குள்

## ஊழியர் சைக்கிள்கள் கொண்டுசெல்ல அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலக ஊழியர்கள் மீண்டும் தமது துவிச்சக்கரவண்டிகளை செய லக வளவினுள் கொண்டுசெல் வதற்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

கடந்த சில வாரங்களாக ஊழியர்கள் துவிச்சக்கர வண் டிகளை உள்ளே கொண்டுசெல் வதற்கு தடைவிதிக்கப்பட்டி ருந்தது.

தற்போது மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. மௌனகுருசாமி மேற் கொண்ட நடவடிக்கையின் பயனுக இந்தத் தடை நீக்கப் பட்டுள்ளது (71)

## பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

இடம்:- குமாரசாமி மண்டபம்
காலம்:- 02 08-1992 ஞாயிறு
நேரம்:- காலை 10-00 மணி

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களில் இருந்து உறுப் பினர்களைத் தெரிவு செய்வதற்காக சகல அங்கத் தவர்களையும் தவருது சமூகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்ருேம்.

பாலசுப்பிரமணியம் நவபாலன்
செயலாளர்,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
பழைய மாணவர் சங்கம். (ஏ-2310]

## வருடாந்த விழா

நவாலி மதிஒளி சனசமூக நிலையத்தின் முதலா வது ஆண்டுவிழாவில் சைக்கிள் ஓட்டமும், மரதன் ஓட்டமும் நடைபெற இருப்பதால் தமிழீழ எல்லைக் குள் இருப்போர் அனைவரும் (ஆண்கள் மட்டும்) பங்கு பற்றலாம்.

பதிவுசெய்யும்]இடம்: நவாலி தெற்கு மதிஒளி சனசமூக நிலையம்

பதிவுசெய்யும் கடைசி திகதி: 30 - 07 - 1992

நிர்வாகிகள்
(சி-6566)

## இராசி பலன்

22 07-1992
புதன்கிழமை
(தமிழுக்கு ஆடி 07)

ஸப்தமி மு. ப. 11-42 வரை, ரேவதி ந. ப. 12.20 வரை. மரணயோகம், இராகு காலம் 12-02 முதல் 1-32 வரை, சுபநேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை

மேடம்: தொழில்பாராட்டு வெற்றி வாய்ப்பு, தியானம்.

இடபம்: மறைமுகத் தொல்லை, அவமதிப்பு, குடும்ப விரோதம்.

மிதுனம்: கற்பனை மிகுதி, வேலைப்பளு, வாக்கு வன்மை.

கடகம்: தொழில்மேன்மை நாணயம், மகிழ்ச்சிப் பிர வாகம்.

சிங்கம்: மனச் சங்கடம், தொழில் நஷ்டம், அலைச்சல்.

கன்னி: தடுமாற்றம், குடும் பத் தொல்லை, நெஞ்சுவலி.

துலாம்: எதிர்பார்த்த நன்மை, சுபகாரியம். வெகு மதி.

விருச்சிகம்: பணவரவு, இன சனக்கொண்டாட்டம், காரிய சிததி.

தனுசு: அதிக யோசனை, குடும்பக் கஷ்டம், அகங் காரம்.

மகரம்: துயரச் செய்தி, வாக்குக் கலகம். அகால போஜனம்.

கும்பம்: விருந்து வைபவம், மாமனர் உதவி, பொதுப் பணி.

மீனம்: உடல் உபாதை, பணத் தகராறு, தப்பபிப் பிராயம்.

— ஜோஸ்யர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## மேஜர் ரெட்ணராஜ்/ரெட்டி
(தம்பி)

வீரப் பிறப்பு: 10-02-70 வீரச்சாவு: 22-07-91

[22-07-91 அன்று ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துடன் புல்லாவெளியில் ஏற் பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண் டார்.]

ரெட்டியே...!
தன்மான போரான
தாய் மண் போரினில் – எதிரியின்
தடைகளை உடைத் தெறிந்த
புலிவீரன் நீயென்று
தரணியே பாடுதடா
களம் பல கண்ட
காவியப் புருஷனே – உன்
சுவட்டை நோக்கி......

இதே தினத்தில் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளையும் நினைவுகூருகின்ருேம்.

குடும்பத்தினர்.

தம்பிப்பிள்ளை அந்தோனிதாஸ்,
மன்னர். (சி-6567)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



## து. பஞ்சலிங்கம்
(மனே மாஸ்டர்)

தோற்றம்: 09-04-1956 அழிப்பு: 22-07-1984

குடும்பத்தினர், நண்பர்கள்,
உறவினர், ஊர்மக்கள்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை, (சி-6541)

## காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கி

## அறிவித்தல்

சுளிபுரம் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள மேற்படி சங்கத்தின் கிராமிய வங்கியில் சாதாரணசேமிப்புக் கணக்கு நிலைவைப்பு கணக்கு. விசேட சேமிப்பு கணக்கு, நீடித்த வைப்பு கணக்கு (இளம் வயதினர்) ஆகிய கணக்கு களின் மீதிகளை 31-08-91 திகதி முடிய கிராமிய வங்கி கணக்கு புத்தகங்கள காட்டும் மீதிகளுடன், தாங்கள் வைத்திருக்கும் சேமிப்பு பாஸ் புத்தகங்களை சமர்ப்பித்து இரு மீதிகளையும் 24-07-92 தொடக்கம் 30-07-92 வரையான காலப் பகுதிக்குள் உங்கள் கணக்கு இலக்கம் குறிப்பிட்ட திகதியில் காலை 9-00 — 12-00 மணி வரை கணக்கு மீதிகளை ஒப்புநோக்க முடியும் என்பதை அறியத்தருகிருேம்.

### சாதாரண சேமிப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24-07-92 | — | வெள்ளிக்கிழமை | — | கணக்கு இல. | — | 1 - 600 |
| 25-07-92 | — | சனிக்கிழமை | — | கணக்கு இல. | — | 601 - 822 |
| | | | | கணக்கு இல. | — | 10001 - 10400 |
| 27-07-92 | — | திங்கட்கிழமை | — | கணக்கு இல. | — | 10401 - 11000 |
| 28-07-92 | — | செவ்வாய்க்கிழமை | — | கணக்கு இல. | — | 11001 - 11600 |
| 29-07-92 | — | புதன்கிழமை | — | கணக்கு இல. | — | 11601 - 12069 |
| 30-07-92 | — | நிலையான வைப்பு, முதலீட்டு சேமவைப்பு, இளம்வயதினர் விசேட சேமவைப்பு. | | | | |

பொது முகாமையாளர்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
வழக்கம்பரை.

(எ-2312

# "தொழுநோயாளரை இனம் கண்டு உடன் சிகிச்சையளிக்க வேண்டும்"

- கலாநிதி குணரத்தினம் -

"தொழுநோய் ஒரு கொடிய வியாதி. இந்நோயினால் சுத்தியல் நரம்புத் தொகுதிகள் பாதிப்படைந்தால் நிச்சயம் அங்கவீனம் ஏற்படும். சுத்தியல் நரம்புத் தொகுதிகள் பாதிப்படைந்தால் எந்த வைத்தியத்தாலும் அதனைக்குணப்படுத்த முடியாது. நரம்புத்தொகுதிகள் யாவும் பாதிப்படையும் முன்னரே நோயாளரை இனம் கண்டு சிகிச்சையளித்தால் தொழுநோய் காரணமாக அங்கவீனம் ஏற்படாமல் முற்றாகப் பாதுகாப்பளிக்க முடியும்',

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்கள் மத்தியில் தொழுநோய் பற்றிய விளக்கமளித்த யாழ்ப்பாணமாவட்ட தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் வைத்திய கலாநிதி குணரத்தினம் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்;

நோய்கள் வந்த பின்பு குணப்படுத்துவதில் அன்று முக்கிய கவனம் செலுத்தினோம். ஆனால் தற்போது நோய் வருவதற்கு முன்னரே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பல்வேறு நோய்கள் பரவாமலே தடைப்படுத்தப்படுகின்றன

எமது பிரதேசத்தில் பல நோய்கள் தற்போது பரவுவதற்கு கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு நோய்களை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சுடை மருந்துகள் எமக்குக் கிடைப்பதில்லை. எமது பிரதேசங்களில் உள்ள வளங்களைப் பயன் படுத்தி சுதேசவைத்தியம் செய்யும் வைத்தியர்களும் அருகி வருகின்றனர். போதிய போஷாக் குணவுகள்மக்களுக்குகிடைப்பதில்லை. பலர் தமதுஇடங்களை விட்டுஇடம்பெயர்ந்துநெருக்கமாக வாழ்வதால் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. இதனால் தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புக்கள் உண்டு.

## நோய் தடுப்பு முறைகள்

வயிற்றோட்டம், செங்கண்மாரி, நெருப்புக்காய்ச்சல், இரத்தச்சோகை, கொலரா போன்ற தொற்றுநோய்கள் பரவுவதற்கு எமதுக சுகாதார கவலையீனமே காரணமாகின்றது. சுத்தமான நீர், உணவு வகைகளை உண்பதாலும், மலசல கூடங்களை பாவிப்பதாலும், நோய்த்தடுப்பு முறைகளைபேணுவதாலும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கலாம்.

## தொழுநோய்

தொழுநோய் மாற்றமுடியாத வியாதி அல்ல. அதன் ஆரம்பகாலங்களில் தகுந்த சிகிச்சை பெற்றால் முற்றாக அதனை ஒழித்துவிடலாம். ஆனால் நோய் முற்றிய நிலையில் நரம்புமண்டலங்கள் பாதிப்படைந்தபின் எந்த வைத்தியத்தாலும் அதனைக் குணப்படுத்த முடியாது. தொழுநோய் பற்றிய விபரங்களை சகலரும் அறிந்துகொள்வது அவசியம்.

தொழுநோய் மைக்கோ பக்றீறியம் லெப்றே[Myco Bacterium Leprae] என்னும் கிருமியால் பரவுகிறது.

தொழுநோயின் தாக்கம் ஆரம்பகாலத்தில் அதிகமிராது. ஆரம்பத்தில் உடம்பில் இது ஒரு அழகான சிறு தேமலாக இருக்கும். உடம்பில் ஏற்படும் காயங்கள் வழியாகவும் நோயாளியின் மூக்கில் இருந்து வெளியேறும் கழிவில் இருந்தும் இந்நோய் கிருமி பரவுகின்றது. இக்கிருமியானது சுவாசம், உணவுக் கால்வாய், மற்றும் காயங்கள் மூலமாக உடலினுட் செல்கின்றது. நோயரும்புங்காலம் ஆறுமாதத்திலும் ஆரம்பிக்கலாம். இருபது வருடத்தின் பின்பும் ஆரம்பிக்கலாம். ஆனால் சராசரியாக இரண்டு வருடங்களுள் இது பரவுகின்றது.

## நோயின் தாக்கம்

தேமல் என்ற சாதாரண நிலையில் ஆரம்பித்த இந்நோய் சிறிதுசிறிதாக நரம்புமண்டலத்தை தாக்கி அதனை சேதமாக்குகின்றது. நரம்புகள் பாதிப்படைய அந்நரம்பின் ஆளுமைக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் உணர்ச்சியற்றுப் போய்விடும். அதன் பின்னர் தசைநார்கள் தேய்வடைந்து சுத்தியல் நரம்புத்தொகுதிகள் பழுதடைந்து நிரந்தர அங்கவீனத்துக்கு வழிசெய்கின்றன.

ஆரம்ப நிலையில் காணப்படும் தேமலில் ஊசியால் தொட்டால் உணர்ச்சி இராது அவ்விடத்தில் உரோமம் வளராது. வியர்வை இராது. கடி, சொறி இராது. இதற்குரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாவிடின் புரையோடிய மாறாத சீழ் வடியும் நிரந்தர புண்ணாக அது மாறிவிடும்.

உலகம் பூராவும் நூற்றிஇருபது லட்சம் பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதில் நாற்பது லட்சம் பேர் இந்தியாவில் உள்ளனர், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் இருபது லட்சம் பேர் இந்த நோயால் பாதிப்படைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில கடற்கரையைஅண்டியஇடங்களான வல்வெட்டித்துறை, பருத்தித்துறை. கீரிமலை, சுழிபுரம் போன்ற இடங்களில் இந்நோயின் தாக்கம் அதிகம் இருப்பினும் குடாநாட்டின் பல கிராமங்களிலும் ஆங்காங்கே இந்நோய் செறிந்துள்ளது அவதானிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்நோயால் 670 பேர்வரை பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (இ)

---

# பாலில் கலப்படம் செய்ய வேண்டாம்

(உடுவில்)

பால் உற்பத்தியாளர்களை பாலில் கலப்படம் செய்ய வேண்டாமென பாற்சபை உதவிப் பொதுமுகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாற்சபையின் கிளைச்சங்கங்களுக்கு பால் வழங்கும் பண்ணையாளர்கள், ரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதிருக்கும் நிலையைப் பயன்படுத்தி பாலில் கலப்படம் செய்ய முனைவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பாலில் கலப்படம்செய்து பாற்சபைக்கு வழங்குவது கண்டுபிடிக்கப்பட்டால் காவல்துறையினரிடம் அதுபற்றி புகார்செய்யப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (109)

---

# பாடசாலை உடைத்து பொருட்கள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தில் பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் அப்பகுதி கிராமசேவகருக்கு முறையிட்டுள்ளார்.

பாடசாலை அதிபரின் அலுவலகமும், அலுமாரியும் உடைக்கப்பட்டுள்ளதாகவும், திருட்டுப்போன பொருட்களின் பெறுமதி ரூபா 10,000 வரை இருக்குமென்று தெரிய வருகிறது.

அதிபர் அலுவலக சாமான்களும், பாடசாலை உபகரணங்களும், கற்பித்தல் சாதனங்களும் களவாடப்பட்டுள்ளன. அதிபர் அலுவலக கதவு பாவனைக்கு உதவாமல் உடைக்கப்பட்டுள்ளது. (சு)

---


அளவெட்டி மல்லாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

# பதவி வெற்றிடம்

எம்மால் 18-5-92ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட பதவிகளில் பின்வருவனவற்றிற்கு கீழ் குறிப்பிட்ட திகதிகளில் நேர்முகப் பரீட்சை அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க் மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

கிளை முகாமையாளர் 208/14 - 25-7-92
சனிக்கிழமை மு. ப. 9-00

காவலாளி 315/15 — 26-7-92
ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00

விற்பனையாளர் 308/15 — 26-7-92
ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-00

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முகவரிக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த நிலையில் கடிதங்கள் கிடைக்கப்பெறாத தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என்பதை அறியத்தருகிறோம்.

கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், நற்சான்றிதழ். அடையாள அட்டை.

பொதுமுகாமையாளர்

21-7-92 (ஏ-2311)


# பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரியில் மீண்டும் நடைபெறவுள்ளது

இப்பயிற்சிவகுப்புகளைத் தொடர்ந்து புதிய மத்தியஸ்தர்களுக்கான பரீட்சைகளும் நடைபெற இருப்பதாக மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. ஏ, தேவராசா தெரிவித்தார். (வி)

---

# கருத்தரங்கு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும், மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடாத்தும் கிராமிய அபிவிருத்திக் கருத்தரங்கு ஜூலை மாதம் 25-ம், 26-ம் திகதிகளில் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பகுதிகளைச் சேர்ந்த சனசமூகப் பிரதிநிதிகளையும் பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் அ. இரவீந்திரன் கேட்டுள்ளார். (109)

---

# "உடற்பயிற்சி அவசியம்"

[உடுவில்]

அறிவு வளர்ச்சிக்கு புத்தகக் கல்வி அவசியமாவதுபோல உடல்நலம், வளர்ச்சிக்கு உடற்பயிற்சிகளும் விளையாட்டுகளும் அவசியமாகின்றன.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை விளையாட்டுப்போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வண்ணார்பண்ணை கொத்தணி அதிப.. சி. சிவசரவணபவன் இவ்வாறு கூறினார்.

அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

மருதனார்மடம் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. ரட்ணராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

போட்டி முடிவில் முறையே ஆனந்தன் இல்லம் (464 புள்ளி) கந்தையா இல்லம் (392 புள்ளி) சுப்பிரமணியம் இல்லம் (318 புள்ளி) ஆகியன வெற்றியீட்டின, (109)

---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

# விசேட பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்

யாழ். கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவதால், மேற்படி கிளையின் விசேட பொதுக்கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக எதிர்வரும் 23-08-92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யுபுலி மண்டபத்தில நடைபெறும்.

யாழ். கிளை செயற்குழு உறுப்பினர் பதவிக்கான நியமனங்கள் 10-08-92 முதல் 14-08-92 பிற்பகல் 4-00 மணிவரை எமது பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும். [இதற்கான படிவங்களை எமது பணிமனையில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.]

நியமனப்பத்திரங்களை 16-08-92 பிற்பகல் 4-00 மணிவரை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

11-07-92-க்கு முன் அங்கத்துவப் பணம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டு/அங்கத்துவ அட்டை பெற்றவர்கள் மட்டும் எதிர்வரும் கிளைத்தேர்தலில் பங்குபற்ற உரித்துடையவராவர்.

## பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 09-08-92ம் திகதி வருடாந்த பொதுக் கூட்டம் பின்னர் பத்திரிகைகளில அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். இக்கூட்டங்களில் பின்வரும நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும்.

அ. பிரிவிற்கான புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு 1992/1993.

ஆ. கிளைப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் 30 கிளைச் சபை பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30 கிளைககுழுப் பிரதிநிதிகளின் முழுப்பெயர். அங்கத்துவ அட்டை இலக்கம், தே. அ. அ. இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவுசெய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர், யாழ். கிளை கௌரவ செயலாளருக்கு 10-08-92 பிற்பகல் 4-00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.

பிரிவுகளின் நியமனம் 26-07-92 முதல் 30-07-92 வரை பிரிவு பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். பிரிவுகளின் நியமன வாபஸ் 02-08-92 பிற்பகல் 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். (இதற்கான படிவங்களை ரூபா 10/- செலுத்தி பிரிவு பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.)

பிரிவு வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் ஒவ்வொரு பிரிவுகளால் கிளையின் கௌரவ செயலாளருக்கு 25-07-92 பிற்பகல் 4-00 மணிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
21-07-92.

(ஏ-2813)

# விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்ற வயதுவேறுபாடுதேவையில்லை

## - கவிஞர் புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுவதற்கு வயது வேறுபாடு தேவையில்லை. முழுப் பொறுப்புக்களையும் பிஞ்சுகளிடம் ஒப்படைத்துவிட்டு, பெரியவர்கள் பென்ஷன் எடுக்கக்கூடாது. மகாத்மாகாந்தி, ஹோசிமின், மாசேதுங் போன்றவர்கள் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். சேகுவேராவுக்கும் 40 வயதுதான். இந்த வயதுக் காலத்திலும் இந்த விடுதலை வீரர்கள் போராடினார்கள்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் மு.வே.வாஞ்சிநாதனின் 'நெருப்பு மழை' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கவிஞர் வாஞ்சிநாதனின் கவிதைகளைப் புரிந்துகொள்வதற்குபோராட்டதைகை ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். சமகாலத்துடன் இணைந்துகொள்ளாமல் இந்தக் கவிதைகளின் சிறப்புக்களைப் புரிந்துகொள்ளமுடியாது.

வாஞ்சியின் கவிதைகள் சில இந்திய மத்திய சிறைகளில் எழுதப்பட்டது. அவரின்உடல் சிறையில் இருந்தாலும், உள்ளுணர்வு வெளியுலகத்தை மீட்டுக்கொண்டிருந்தது.

தன் பிறந்த தாயகம் திருகோணமலையை, போராளிகளை, மாவீரர்களை தலைவனை, பாடிய அவன் தன் மகன் ஆனையிறவுப் போரில் வீரச்சாவு அடைந்த போது 'மகனே உன்வீரச் சாவால்' நான் நிமிந்து நிற்கிறேன் என்று கூறியவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வெளியீட்டுரையை இளங்குமரன் நிகழ்ந்தினர். முருகையன், காரைசுந்தரம்பிள்ளை, சிற்பி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ் மாவட்ட தளபதி செல்வராசா மங்கள விளக்கேற்றி விழாவை ரம்பித்து வைத்தார்கள். (சு)

# 3,500 லிகிதர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(கொழும்பு)

அரசு சேவைக்கு 3,500 லிகிதர்களையும், லிகிதர் பதவிக்கு சமமான பதவிகளுக்கும் ஆட்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

அரச உள்ளூராட்சி, கூட்டுத்தாபன வெற்றிடங்கள் இதன் மூலம் நிரப்பப்படவுள்ளது. பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைவோரே இப்பதவிக்கு சேர்க்கப்படுவர்.

விண்ணப்ப முடிவுத் திகதி ஆகஸ்ட் ஏழாம் திகதியாகும். போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான வர்த்தமானி விரைவில் வடக்கு - கிழக்கு பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இந்திய நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கலாட்டா

(புதுடில்லி)

அயோத்திப்பிரச்னை குறித்த விவகாரத்தில் நீதிமன்ற ஆணையை அமுல்படுத்த மத்திய அரசு தவறிவிட்டதாக கூறி புதுடில்லி நாடாளுமன்ற நுழைவாயிலிற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கலாட்டா செய்துள்ளனர்.

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி கலாட்டாவில் ஈடுபட்டதாகவும் பி. வி. நரசிம்மராவ் அரசு இராஜினமா செயய வேண்டும் என்றும் அயோத்தியில்கட்டுமாணம்பணி உடன நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டதாக ஜனதா தள் தலைவர் தெரிவித்துள்ளர்ர். (க)

# புலிகளின் முயற்சியினுல் ஆசிரியர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையில் இடம் பெற்ற ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு விடுதலைப்புலிகள் எடுத்துக கொண்ட சமரச முயற்சியினுல் கைவிடப்பட்டது.

மேற்படி பாடசாலை ஆசிரியர் ஒருவரின் பணம் வகுப்பறையில் வைக்கப்பட்டபோது அது திருடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது பற்றி அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதைத்தொடர்ந்து ஆசிரியர்களால் விசாரணை செய்யப்பட்டு மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

அப்பாவி மாணவர்கள் தண்டிக்கப்பட்டதாக பெற்றோர்களால் அதிபருக்கு புகார் செய்யப்பட்டதுடன் அதிபர், ஆசிரியர் ஆகியோர்களுக்கு எதிராக பெற்றோர் ஒன்று திரண்டார்கள்.

இதனை ஆட்சேபித்து மேற்படி பாடசாலை ஆசிரியர்கள், அப்பெற்றோர் வந்து மன்னிப்புக் கேட்கும்வரை பாடசாலையைப் பகிஷகரிப்புச் செய்வதில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் விடுதலைப் புலிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுபபாளர் இலக்கியன் தலையிட்டு இருபகுதியினரையும் அழைத்து சமரசம் செய்து வைத்தார்.

சுமார் ஒருவாரகாலமாக இடம்பெற்ற பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. (83)

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அணிக்கும், குருநகர் பாடும் மீன் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி, இன்று மாலை 4-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானததில் நடைபெறவுள்ளது.

### கரையோர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகல் மண்டைதீவுக்கு சமீபமாக இரண்டு பீரங்கிக் கப்பல்கள் தரித்து நின்று யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டன.

மேற்படி தாக்குதல்களினுல் யாழ். நகர் கரையோரப் பகுதிகளில் குடியிருந்த மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இத்தாக்குதலினுல் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களும் தமது தொழில்களை கைவிட்டு கரைக்கு வந்தனர்.

கடந்த சில நாட்களாக, மண்டைதீவு இராணுவத்தினர் யாழ் நகர் கரையோரப் பகுதிகளை நோக்கி அடிக்கடி பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுக்காலை பலாலி இராணுவ முகாமிலிருந்தும் வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-75)

### சித்தாண்டியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

மட்டக்களப்பிலிருந்து நேற்று பொலநறுவைக்குச் சென்றுகொண்டிருந்த பயணிகள் ரயில் சித்தாண்டியில் ஆயுதம் தாங்கிய குழுவினரால் வழிமறிக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் 11 பேர் காயமடைந்தனர். ரயில் சாரதியும் ஏனையபயணிகளும் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடிமக்கள் போல் வேடமணிந்த சிலர் சித்தாண்டியில் வைத்து சிவப்புக்கொடியை காட்டி ரயிலை நிறுத்தியதாகவும் ரயில் நிறுத்தப்பட்டதும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து ரயிலில் பயணம் செய்தோர் இறங்கி ஓடத்தொடங்கினர். பின்னர் ரயில் ஆயுதம் ஏந்தியோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

சித்தாண்டி, கிரான் இராணுவ முகாமிலிருந்து படையினர் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளதாகவும் இதில மரணமானோர் மற்றும் காயமடைந்தோர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தோர் எனவும் கூட்டுபடைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது. (க-மா-ரி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்து செல்லும் படையினர் தற்போது ரோந்து நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ரோந்து சென்ற படையினர் பலர் புலிகளின் தாக்குதல்களினுல் பெருமளவில் கொல்லப்பட்டு வந்தனர்.

படையினரின் இழப்பைத் தவிர்ப்பதற்கே இத்தகைய ரோந்து நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ரி)

### கூட்டுறவுச்சங்க

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கிளாலி கடல் மார்க்கமாக பெருமளவு மண்ணெண்ணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்து சேர்ந்துள்ளமையால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இத்திட்டத்தினுல் தற்போது ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறை நீங்கிவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் நாடுமுழுவதையும் தொடர்ந்தும் பாதித்து வருவதாகவும் இதனுல் முதலீட்டாளர்கள் இலங்கையில் தமது முதலீட்டை செய்ய தயக்கம் காட்டி வருகிருர்களாம். (ஜி)

### பாதுகாப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ யாழ் மாவட்ட இராணுவத் தளபதி விஜய விமலரத்ன, மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அதன்போது நடைபெற்று முடிவடைந்த 'பலவேகய-2' நடவடிக்கை பற்றியும் விபரமாக ஆராயப்பட்டுமுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் தீவுப்பகுதி சிவில் நிர்வாக விஸ்தரிப்பு குறித்தும் இங்கு ஆராயப்பட்டதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (சி)

# பரிசிலனையின் பின் நிவாரண அட்டைகள் ஒப்படைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

''இடம் பெயர்ந்த தீவக மக்களின் நிவாரண அட்டைகள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும்'' என்று யாழ். செயலகப் புனர்வாழ்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த தீவக மக்கள் தற்பொழுது எந்த முகவரியில் இருக்கின்றுர்கள் என்பதை அப்பகுதி கிராம சேவையாளர் மூலம் தெரிந்து கொண்ட பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டையுடன் ஒப்பிட்டுப் பார்த்த பின்பும் நிவாரண அட்டைகள் மீண்டும் உரியவர்களிடம் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்கப்படும் என்று அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

# புலிகளின் தாக்குதலினுல் படையினர் மத்தியில் குழப்பம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அண்மைக்காலத் தாக்குதல்களில் இராணுவத்தினர் மத்தியில் குழப்பமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புலிகள் தொடராதக்குதல்களை நடத்தி வருவதால் எப்பகுதியிலுள்ளமுகாம்களைப் பலப்படுத்த வேண்டும் என்பதில் இரரணுவத்தினர் குளம்பிப் போயுள்ளனர்.

வடக்கிலுள்ள முகாம்களைப் பலப்படுத்தினுல் கிழக்கில் புலிகள் பலமான தாக்குதலை நடத்துகிருர்கள். கிழக்கில் இராணுவத்தைப் பலப்படுத்தினுல் வடக்கில் பெரும் தாக்குதலைப் புலிகள் நடத்துகிருர்கள் இதனுல் எப்பகுதியைப் பலப்படுத்துவது என்ற கேள்வி இராணுவத்தினரிடையே எழுந்துள்ளது.

இரு மாகாணங்களிலும் உள்ள இராணுவ முகாம்களை பலப்படுத்தக்கூடிய வசதிகள் சிறிலங்கா இராணுவத்தினரிடம் இல்லாமையினுலேயே இராணுவத்தினர் குழம்பிப் போயுள்ளனர் என்று தென் பகுதியில்இருந்து வரும்தகவல்கள் தெரிவிக்கின்றனர். (ரி)

### யாழ். செயலகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணம் உடனடியாக வழங்குவதற்கு செயலக அதிகாரிகள் மேற்கொண்ட துரித நடவடிக்கையால் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை செயலகத்தின் முன்னுல் நடாத்தப்பட்ட இந்த மறியல் போராட்டத்தினுல் செயலகத்தினுள் இருந்தவர்கள் வெளியேறுவதற்கும், வெளியே இருந்து எவரும் உள்ளே செல்வதற்கும் அனுமதிமறுக்கப்பட்டது.

தீவகப் பகுதி ப. நோ. கூ. சங்கங்களின் முகாமையாளர்கள், யாழ். செயலக அதிகாரிகள், தீவகப் பகுதி உதவி அரச அதிபர் ஆகியோர் யாழ். செயலகத்தில் நடாத்திய அவசர கூட்டத்தின்பின்பு, நிவாரணம் உடனடியாக வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்று பிற்பகல் 2மணிக்குப் பின்பு யாழ். செயலகத்தினுல் அனுப்பப்பட்ட பெயர் பட்டியலின்படி தீவக மக்களுக்கு, அவர்களின், ப. நோ. கூ. கிளைகளில் நிவாரணம் வழங்கப்பட்டது. (வி-71)

# ஓய்வூதிய பணிக்கொடைகள்

(மானிப்பாய்)

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிற்கு 157 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் சிவிலுக்குரியதும் விதவைகளுக்குரியதுமான பணிக்கொடைகள் அடங்குகின்றன. [71]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office [Sri Lanka under Licence Number B/10336/8